# தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை வெற்றிடங்கள்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையில் பின்வரும் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவிப் பெயர் - உதவி சட்ட அதிகாரி**

**சேவை வகுதி - கனிஷ்ட முகாமையாளர் - (JM 1-1)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

**01.1. தகைமைகள்**

**01.1.1. வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சட்டம் தொடர்பான பட்டமொன்றை பெற்றிருப்பதோடு உயர் நீதிமன்ற வழக்கறிஞராயும் இருத்தல்

மற்றும்

வழக்கறிஞர் மற்றும் நொத்தாரிசாக 01 வருட அனுபவம் இருத்தல்.

**01.1.2. உள்ளக விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகள்**

மேலே குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**01.2. வயது**

**22** வயதிற்கு குறையாமலும் **45** வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**01.3. சம்பள குறியீட்டு இலக்கம் -** JM 1-1

**01.4. மாதாந்த சம்பள அளவுத் திட்டம்** - 01.01.2025 ஆம் திகதி முதல்

**JM 1-1** மு.சு 01/ 2025 **ரூ. (72,650 - 10 X 1,360 - 18 X 2,040 – 122,970/-)**

(சம்பளத்திற்கு மேலதிகமாக அரசால் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகும்)

**இந்த பதவிக்குமான பொதுவான விடயங்கள் :**

அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கை பிரசையாக இருப்பதோடு, பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை சிறப்பாக நிறைவேற்றவும் தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் உடல் ரீதியாக பொருத்தப்பாடுடையவராகவும சிறந்த நடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று எல்லா விதத்திலும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான ஊடகம்**

அனைத்து விண்ணப்பதாரிகளும் ஆங்கில மொழியில் மட்டும் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் உத்தியோகபூர்வ வலைத்தளமான www.nddcb.gov.lk ஐப் பார்வையிடவும். “Careers” (https://www.nddcb.gov.lk/tamil/careers.php) இல் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின் படி விண்ணப்பப்படிவத்தை நிரப்பவும், பின்னர் விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கவும். அதன் நகலை அச்சிட்டு, கட்டணம் செலுத்திய மூலப்பிரதியையும் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு செயல்முறை**

ஆட்சேர்ப்பு அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைப்பு நேர்முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**நியமனத் தன்மை**

நிரந்தரமானது, ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு தகுதியுடையவர்.

**சேவைக் கட்டணம்**

வெளிவாரி விண்ணப்பதாரிகள் மட்டும் விண்ணப்பக் கட்டணமாக 500 ரூபாவை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் “தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை” எனும் பெயரில் இலங்கை வங்கியில் எந்தவொரு கிளையிலும் (Corporate Branch) நடைமுறைப்படுத்தப்படும் கணக்கு இலக்கம் 00001643 இல் வைப்புச் செய்து, காசு வைப்பு பற்றுச் சீட்டின் பிரதியொன்றை நீங்கள் வைத்துக் கொண்டு அதன் மூலப் பிரதியை (**Deposit slip**) விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்டு பதிவிறக்கப்பட்ட விண்ணப்படிவங்களை (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக எழுதி) உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **21.11.2025** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் தலைவர், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை, 383, கோட்டே வீதி, இராஜகிரிய எனும் விலாசத்திற்கு அனுப்பவும். அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது சட்டபூர்வமான சபைகளில் சேவைபுரியும் ஊழியர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவன / திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று உரிய தகைமைகளை பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் / முழுமையற்ற விண்ணப்பங்கள் / காசு வைப்பு பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை இணைத்திராத விண்ணப்பங்கள் / மாதிரி விண்ணப்பத்திற்கமைய விண்ணப்பிக்காத (Downloaded Application) விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஆகியன நிராகரிக்கப்படும்.**

**ஆட்சேர்ப்புத் தொடர்பாக சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்கள் இறுதித் தீர்மானம் ஆகும்.**

**தலைவர்**

**தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை**

**383, கோட்டே வீதி,**

**இராஜகிரிய.**

வெளியிட்ட திகதி : 31.10.2025